
# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638183




## ஆண்டுமலர்

# 2019 - 2020

Scanned with CamScanner

# மலர்க்குழு

முனைவர். திருமதி. **வெ.கலைச்செல்வி**
முதல்வர்

முனைவர் திரு. **வெ.மனோகரன்**
தமிழ் உதவிப் பேராசிரியர்

செல்வன் **M.சோமசுந்தரம்**
பி.எட். இரண்டாமாண்டு - ஆங்கிலத்துறை

செல்வன். **டி.செந்தில்ராஜா**
பி.எட். முதலாமாண்டு - ஆங்கிலத்துறை

Scanned with CamScanner

11.12.19 இல் சேலம் பத்மவாணி கல்வியியல் கல்லூரியில் Online submission of performance Appraisal Report of Teacher Education Institution - Challenge and Solution குறித்த கருத்தரங்கில் நம் கல்லூரி கௌரவ விரிவுரையாளர் திருமதி. கு.க. சுமதி கலந்து கொண்டார். நமது கல்லூரி இப்பணியைச் சிறப்பாகச் செய்து கொடுத்தமைக்கு முதல்வர் முனைவர் வெ. கலைச்செல்வி, திருமதி. கு.க. சுமதி அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

03. 02. 2020 – இல் கல்லூரி விளையாட்டு விழா அணிவகுப்பு மரியாதையுடன் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு கல்லூரி உடற்கல்வி இயக்குநர் மற்றும் அனைத்துப் பேராசிரியர்கள் மற்றும் கௌரவ விரிவுரையாளர்கள் பங்காற்றினர்.

10 .01. 2020 –இல் கல்லூரியின் 65–வது பேரவைத் தொடக்க விழா கல்லூரி முதல்வர் தலைமையில் S.S.M. பாலிடெக்னிக் கல்லூரி தாளாளர் உயர்திரு. S.S.M.P இளங்கோ அவர்கள் சிறப்புரையுடன் நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவ–மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. இதில் அனைவரும் கலந்து கொண்டனர்.

11.01. 2020 இல் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கல்லூரி வளாகத்தில் கொண்டாப்பட்டது. 26. 01. 2020 – இல் குடியரசுத் தின விழா முதல்வர் முனைவர். வெ. கலைச்செல்வி அவர்கள் தலைமையில் எஸ். எஸ். எம் பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதில் முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் கலந்து கொண்டு சிறயப்பித்தனர்.

27.01. 2020 மற்றும் 28.01. 2020 இல் மாணவர்களுக்குப் பாட்டுப்போட்டி, பேச்சுப்போட்டி, மற்றும் கட்டுரைப் போட்டிகள் 2–00 பிற்பகல் 4–00 பிற்பகல் வரை நடத்தப்பட்டது.

31.01.2020 இல் Motivational programme திரு. வெ. வெங்கடேஸ்வர பிரசாந்த் வேலூர் அவர்களால் ஊக்கமுடைமை, நேரத்தை நிர்வகித்தல், ஆளுமைத் திறன் மேம்பாடு, மொழித் திறன் வளர்ச்சி போன்றன குறித்த தகவல்களை மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வழங்கினார்.

07.02.2020 இல் ராசிபுரம் திருவள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கொரோனா வைரஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கல்லூரி கௌரவ விரிவுரையாளர் திருமதி. இர. அருள்ஜோதி கலந்து கொண்டார்.

07.02.2020 இல் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வளாகத் தேர்வு நடைபெற்றது. வளாகத் தேர்வு M.A.M பள்ளி P.S.F பள்ளி மற்றும் Global ஆகிய பள்ளிகளால் நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யபட்டனர்.

10.02.2020–ல் தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகத்தால் ஆண்டுதோறும் நடத்தும் மாவட்ட அளவிலான கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் 20 கல்லூரிகளுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் எம் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசு பெற்றுச் சிறப்பித்தனர்.

12.02. 2020இல் தர்மபுரி மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்கத்தில் நடைபெற்ற Audit Joint Sitting-ல் கலந்து கொண்டு முதல்வர் முனைவர் வெ. கலைச்செல்வி, அலுவலக கண்காணிப்பாளர் திரு. மா. முருகேசன் மற்றும் உதவியாளர் திரு. து. ஜெயசீலன் ஆகியோர் கல்லூரி தணிக்கைப் பத்திகளை நிவர்த்தி செய்து வந்தனர்.

Scanned with CamScanner

21.02.2020–இல் கல்லூரி முன்னாள் மாணவர்களான (2000–2001 Batch) திரு. ஜெயக் மற்றும் திரு. குமார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, கல்லூரி முதல்வர் முனைவர் வெ. கலைச்செல்வி அவர்களுக்குப் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

24.2.2020–ல் கல்லூரியில் பவானி ரோட்டரி சங்கம் சார்பில் இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. இதில் முதல் மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் 34 பேர் ஆர்வத்துடன் பங்கேற்று இரத்த தானம் செய்தனர்.

27.02.2020 –இல் சாரண– சாரணியர் பயிற்சி முகாம் S.S.M மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி துணை முதல்வர் திரு. பார்த்திபன் ஐயா மற்றும் திருமதி. ஜானகி அவர்களால் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றது. இது முதலாமாண்டு மாணாக்கர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

02.03.2020 –இல் இரண்டாமாண்டு மாணவர்களுக்குப் பல்கலைக்கழகச் செய்முறைத் தேர்வு 02. 03. 2020 மற்றும் 03. 3. 2020 ஆகிய இருநாட்கள் நடைபெற்றன. புறத்தேர்வாளர்கள் முனைவர் எஸ். சிவக்குமார் பழனி மற்றும் திரு. ஜெ. குமார், நாகப்பட்டினம் ஆகிய இரு பேராசிரியர்களால் செய்முறைத் தேர்வு சிறப்பாக நடைபெற்றது.

## விடுதிகள்

இக்கல்வியாண்டில் கல்லூரி விடுதியில் 23 மாணவர்களும் 58 மாணவியர்களும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து தங்கிப் பயில்கின்றனர். விடுதியின் காப்பாளராக முதல்வர் முனைவர். வெ. கலைச்செல்வி அவர்கள் சிறப்பாக பணியாற்றினார். விடுதி துணைக் காப்பாளராக திரு. மா. முருகேசன், அலுவலக கண்காணிப்பாளர் அவர்கள் சிறப்பாக பணியாற்றினார். இவ்விடுதியில் குறைந்த செலவில் நிறைவான வகையில் ஒப்பந்த அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 90.00 ரூபாய் என்ற முறையில் உணவு வழங்கப்படுகிறது. விடுதியின் ஒப்பந்ததாரர் திரு. சபியுல்லா மற்றும் உதவியாளர்களுக்குக் கல்லூரியின் சார்பில் என் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். பெண்கள் விடுதி காவலராகப் பணியாற்றி வரும் திருமதி. மனோன்மணி அவர்களுக்கும் ஆண்கள் விடுதி காவலர் திரு. குருசாமி அவர்களுக்கும் எனது பாரட்டுதல்களைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

## நூலகம்

இக்கல்லூரியில் 2019–2020 ஆம் கல்வியாண்டில் ரூ. 17000/– அரசு நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டதில் 93 புத்தகங்கள் வாங்கப்பட்டன. இக்கல்லூரி நூலகத்தில் மொத்தம் 14,855 புத்தகங்கள் உள்ளன. இக்கல்லூரி நூலகம் முற்றிலும் திறந்த முறையில் இணையதள வசதியுடன் மாணவ– மாணவியர்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் இணை நூலகராக பேராசிரியர் ச. மணிவண்ணன் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். P.D.I நூலக கட்டணத்திலிருந்து மாணவர்களுக்கு நாளிதழ்கள், வாங்கப்படுகின்றன. இவர் தனது சொந்த செலவில் Emloyment News செய்தித்தாளை மாணவர்கள் பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளார் அவர்களுக்குக் கல்லூரியின் சார்பில் பாராட்டுதல்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Scanned with CamScanner

விளையாட்டு விழா :

2019 –2020ஆம் ஆண்டுக்கான மாவட்ட மற்றும் மண்டல அளவிலான கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நாமக்கல் மாவட்டம் கே. எஸ் ஆர் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது. இதில் 10. 02. 2020 அன்று நடைபெற்ற கலைபோட்டியில் பேச்சுப் போட்டியில் நம் கல்லூரி இரண்டாமாண்டு மாணவர் செல்வன் எஸ். கிருபாகரன் முதலிடம் பெற்றுத் தங்கப் பதக்கம் வென்றார். கட்டுரைப்போட்டியில் அ. இந்துமதி என்ற மாணவி மூன்றாமிடம் பெற்று வெண்கலப் பதக்கம் பெற்றார். மேலும் 11. 02. 2020 அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் நமது கல்லூரி முதலாமாண்டு மாணவன் கே. கருப்புசாமி 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பெற்றார். இரண்டாமாண்டு மாணவர்கள் எம். ஜெயவேல் 800 மீட்டர் ஓட்டப் பந்தியத்தில் இரண்டாமிடம், எம். சதீஸ் உயரம் தாண்டும் போட்டியில் முதலிடம் மற்றும் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடம் பி. கலையரசன் 100 மீட்டர் ஓட்டப் பந்தியத்தில் இரண்டாமிடம் எஸ். இராஜேஸ்வரி குண்டு எறிதலில் முதலிடம், மேலும் 4X100 மீட்டர் தொடர் ஓட்டப்போட்டியில் பி. கலையரசன், எம். ஜெயவேல், அ. அந்தோணி ஆபேல் எம். சதிஷ் இரண்டாமிடம் பெற்றனர்.

17.02.2020 அன்று நடைபெற்ற மண்டல அளவிலான கலைப் போட்டியில் நமது கல்லூரி இரண்டாமாண்டு மாணவர் எஸ். கிருபாகரன் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றார் 18.02.2020 அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலாமாண்டு மாணவர் கே. கருப்புச்சாமி 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் மூன்றாமிடம் பெற்று வெண்கலப் பதக்கம் வென்றார்.

இரண்டாமாண்டு மாணவர் பி. கலையரசன் 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடமும் எம். சதிஷ் 400 மீட்டர் ஓட்டப் போட்டி மற்றும் உயரம் தாண்டுதலில் இரண்டாமிடமும் பெற்றனர். 4X100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் பி. கலையரசன், எம். ஜெயவேல், அ. அந்தோணி ஆபேல், எம். சதிஷ் இரண்டாமிடம் பெற்றனர். மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டியில் எம். சதிஷ் இரண்டாமாண்டு மாணவர் தனிநபர் சேம்பியன் பட்டமும், இக்கல்லூரி ஒட்டு மொத்த சேம்பியன்சிப் பட்டத்தை வென்றது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணி ஏற்பு:

02.12.2019 இல் சேலம்–7 அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி) கல்லூரியிலிருந்து நம் கல்லூரிக்குக் கண்காணிப்பாளராக திரு. மா. முருகேசன் அவர்கள் பணியேற்றார். இக்கல்லூரியில் பணிபுரிந்த கண்காணிப்பாளர் திரு. முரளிதரன் இடமாற்றம் மூலம் சேலம்– 7. அரசு கலைக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டார் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22.01.2020 இல் அரசு கல்வியியல் கல்லூரி குமாரபாளையத்தில் தமிழ் இணைப் போசிரியராகவும் முதல்வர் கூடுதல் பொறுப்புடன் பணிபாயற்றி வரும் திருமதி. முனைவர். வெ. கலைச்செல்வி இதே கல்லூரியில் இரண்டாம் நிலை கல்லூரி முதல்வராக 22. 01. 2020 முற்பகல் பணியில் சேர்ந்து பொறுப்பேற்றுக் கொண்டார். கல்லூரி முதல்வரை அனைவரும் வாழ்த்தினர்.

பணி ஓய்வு –

இகல்லூரியில் இணை நூலகராகப் பணிபுரிந்த திரு– ச. மணிவண்ணன் 31. 10 2019 அன்று பணிஓய்வு பெற்றும், மீண்டும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் ஆணையின் மூலம் மறுநியமனம் பெற்று. தொடர்ந்து 2019 முதல் 31.05. 2020 வரை பணியாற்றி ஓய்வு பெற்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Scanned with CamScanner

அலுவலகப் பணி–

1. உதவித்தொகை
மாணவர்கள் நலன் பேணும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித்தொகை முதலாமாண்டு மாணவர்கள் 68 பேருக்கு ரூபாய் 3,57,635 பெற்றுத் தரப்பட்டுள்ளது. இரண்டாமாண்டு மாணவர்கள் 64 பேருக்கு 3,44,550 பெற்று தரப்பட்டுள்ளது. முதலாமாண்டு மாணவியர்களுக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு முதலாம் ஆண்டில் 18 மாணவ-மாணவியர்களின் விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது மேலும் இரண்டாமாண்டு மாணவர்கள் 22 பேரின் விண்ணங்கள் ஒப்பளிப்புக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரூசா நிதி உதவி – RUSA நிதி விவரம்–

ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 2,00,00,00,000( 2 கோடி)

25சதவீதம் புதுக்கட்டிடம் கட்டுதல் – ரூ. 70,00,000

25 சதவீதம் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ரூ. 70, 00,000

30 சதவீதம் கருவிகள் வாங்குதல் – ரூ. 60,00,000

செலவு பட்டியல்

2015 –16 – ரூ. 25,00,000 ( கருவிகளுக்குச் செலவிடப்பட்டது)

2017– 18 –ரூ. 1,20,00,000 ( 70,00,000 கருத்தரங்க புதுக்கட்டம் ) PWD

ரூ. 50,00,000 பராமரிப்பு PWD

2018–19– ரூ. 5,00,000 நாற்காலி மற்றும் LCD Projector

மொத்தத்தொகை செலவழிக்கப்பட்டது.

மூன்றாவது தவனை பெறப்பட்டது. ரூ. 50,00,000/–

கல்லூரிக்கு ரூசா திட்டத்தின் கீழ் ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 1.50 கோடிக்குச் செலவீனம் மேற்கொள்ளப்பட்டது. ரூசா நிதியில் செலவினத்திற்கான பயன்பாட்டு சான்றிதழ் பெறப்பட்டு முறையாக ரூசாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

RUSA PHASE- I component 7 Infrastructure Grands to Colleges என்னும் தலைப்பின் கீழ் நமது கல்லூரிக்கு ரூ. 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில் ஏற்கனவே முதல் தவணையில் ரூ. 24,99.,993/– தொகையும் இரண்டாவது தவணையில் ரூ. 1,20,00,000/– பொதுப்பணித்துறைக்கும் Equipments என்னும் தலைப்பின் கீழ் ரூ. 93,751/–க்கு நாற்காலிகளுக்கும் . ரூ 4,05,303)ஆக மொத்தம் ரூ. 1,49,99,047/– செலவு செய்யப்பட்டு பெற்ற ரூ. 1,50,00,000/– ரு. 953 மட்டும் வங்கி கணக்கில் மீதமாக இருந்தது.

Scanned with CamScanner

மூன்றாவது தவணையில் பெறப்பட்ட ரூ. 50,00.000/–ல் ரூ. 20,00,000/– பொதுப்பணித்துறைக்குப் பராமாரிப்புப் பணிக்காகவும் ELCOT நிறுவனத்திற்கு ரூ. 12,78,484/– கணிப்பொறி LCD Projector வாங்குவதற்கும் வழங்கப்பட்டது.

இதுபோக மீதமுள்ள தொகையான ரூ. 17,21,516/– தொகையுடன் ஏற்கனவே இரண்டு தவணைகளில் மீதமுள்ள ரூ. 953/– சேர்த்தும் ரூ. 17,22,469/– ரூபாயைக் கூடைப்பந்து விளையாட்டு மைதானம் அமைக்க பொதுப்பணித்துறைக்குக் காசோலையாக வழங்கப்பட்டது.

RUSA –வில் பெறப்பட்ட ரூ. 2 கோடிக்கும் தணிக்கையாளரிடம் தணிக்கை அறிக்கை பெறப்பட்டு RUSA அலுவலகத்திற்குச் சமர்பிக்கப்பட்டது.

ரூசா ஒங்கிணைப்பாளர் பதவிவகித்து வந்த முனைவர். வெ. கலைச்செல்வி அவர்கள் முதல்வர் பதவி உயர்வு பெற்றதின் காரணமாக 03. 02. 2020 முதல் முனைவர். வெ. மனோகரன் அவர்கள் RUSA பொறுப்புகளை பெற்றுக் கொண்டு RUSA பணிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பொதுப்பணித்துறையின் கீழ் நிதி ஒதுக்கீடு**

இந்த ஆண்டு நாமக்கல் மாவட்டத்திலேயே நமது கல்லூரிக்கு மட்டும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ. 60 இலட்சம் தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மின்பணிகளுக்காக ரூ. 1, 50,000 ( ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பாதாயிரம் மட்டும் ) சிறப்புப் பழுது பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மின்கம்பிகளைப் புதுப்பிப்பதற்காக ரூ. 3,00,000 ( ரூபாய் மூன்று இலட்சம் மட்டும் ) ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கல்லூரியிலும் ஆண்கள், பெண்கள் விடுதியிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஆசிரியர்களின் பணிசார்ந்த நிகழ்வுகள்–**

இன்று சுட்ட செங்கற்களாக இருக்கும் மாணவர்களை நாளை கட்டிவைத்த மாளிகைகளாக்கும் முயற்சியில் தங்களை அர்பணித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர்களின் அரிய பணிகள்.

ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் கல்லூரி தொடர்பாக பணிமேல் சென்ற விவரங்கள். முனைவர் மொ.ரவி உடற்கல்வி இயக்குநர். கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகம் மனிதவள மேம்பாடு மையத்தின் சார்பாக 125–வது புத்தொளிப்பயிற்சி (125thOrientation course) 22.01.2020 முதல் 11.02.2020 வரை நடைபெற்ற பயிற்சியில் கலந்துகொண்டார்.

**முன்னாள் மாணவர் சங்கம்.**

இக்கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் 25.09 2016 முதல் தொடங்கி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. இதன் தலைவராகக் கல்லூரி முதல்வர் அவர்களும் பொறுப்பாளராகப் பேராசிரியர் திரு. சு. மணிவண்ணன் அவர்களும் பணிபுரிந்து வருகிறார்கள் கௌரவ விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்து வரும் இக்கல்லூரியின் முன்னாள் மாணவிகள் திருமதி. இரா. அருள்ஜோதி மற்றும் திருமதி. மு. மணிமேகலை பொறுப்பாளர்களாகவும் சங்கத்தில் பணிபுரிந்து வருகிறார்கள்.

Scanned with CamScanner

ஒவ்வொரு வருடமும் மாணவர் சேர்க்கையின் போது நன்கொடையாக ரூ. 250/– மட்டும் பெற்றுக் கொண்டு கல்லூரியின் வளர்ச்சிப் பணிக்காக உயர்கல்வி நிறுவனங்களான NCTE / UGC/NAAC போன்ற பணிகளுக்குக் கல்லூரி ஆவணங்களை முறைப்படுத்தி உரிய முறையில் தயார் செய்து எதிர்கால நலன் கருதி பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி கட்டிடங்களுக்கு முறையான தீ அணைப்புக் கருவிகள், மணல் வாளிகள் போன்றவை நாமக்கல் மாவட்ட தீ அணைப்பு அதிகாரி வழிகாட்டுதலில் 14 எண்ணிக்கை தீ தடுப்பு கருவிகள் கல்லூரியின் அனைத்து கட்டிடங்களிலும் பொருத்தப்பட்டு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்களைக் கல்லூரி முன்னாள் மாணவர் சங்க நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவர்கள் பல்வேறு வருடங்களில் படித்த மாணவர்கள் சந்திப்பு நிகழ்வு ஒவ்வொரு வருடமும் கல்லூரியில் முதல்வரிடம் உரிய அனுமதி பெற்று மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம்.

கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் 1999–ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள் மாணவர்கள் நலன் சார்ந்த பணிகளுக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 19.10. 2019 அன்று 11 மணி அளவில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் முதல்வர் முனைவர் வெ. கலைச்செல்வி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பாளர்களாகப் புதிதாக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கல்லூரி விழாக்கள்

05.09.2019 –இல் ஆசிரியர் தின விழா முதல்வர். முனைவர். கோ. இராஜவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

25.09.2019 – இல் வரவேற்றல் விழா துறை வாரியாக பி. எட் இரண்டாமாண்டு மாணவர்கள் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்றனர்.

02.10.2019 இல் மகாத்மா காந்தி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு தேசிய ஒருமைப்பாட்டு விழாவாகக் கொண்டாடப்பட்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

04. 10. 2019 இல் ஆயுதபூஜை விழா கல்லூரி வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

09.10. 2019– இல் கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முனைவர் வெ. கலைச்செல்வி அவர்கள் கூட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேறுவதற்கும், கல்லூரி வளர்ச்சிப் பணிக்கு உதவிய அனைத்து பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்தார். புதிய பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

Scanned with CamScanner

15.10.2019 இல் முன்னாள் ஜானதிபதியும் சிறந்த அறிவியல் அறிஞருமான உயர்திரு. A.P.J அப்துல்கலாம் பிறந்த நாள் விழா கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

19.09.2019 முதல் 01.11.2019 வரை குறுநிலை கற்பித்தல் (mini teaching) பயிற்சி முதல் ஆண்டு மாணவர்களுக்குச் கற்றுக் கொடுக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட அனைத்து முதலாம் ஆண்டு மாணவ– மாணவியர்களுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

25–11. 2019 – இல் NCTE Performance Appraisal Report system (PAR) பணிகள் 01.10.2019 முதல் 25.11. 2019 வரை மேற்கொள்ளப்பட்டு சிறப்பாக முடிக்கப்பட்டது. பேராசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவர் மதன் உதவிபுரிந்தனர்.

18.11.2019 மற்றும் 19. 11. 2019 இரண்டு நாள் Digital Literary வகுப்புகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு சான்றுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி பவானி IFC- Computer Education மூலம் நடத்தப்பட்டது. முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

Scanned with CamScanner

கல்லூரி வரலாறு

கல்லூரி 1955 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் பேராசிரியர் எஸ்.ஐசக் எம்.ஏ.எல்.டி அவர்களை முதல்வராக கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையம் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்த இக்கல்லூரி 1972- ம் ஆண்டில் புதியதாக கட்டடம் கட்டப்பெற்றபின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது.

இக்கல்லூரியில் 1959 ஆம் ஆண்டில் புலவர் பயிற்சி (TPT) வகுப்பும் 1974 ம் ஆண்டு எம்.எட் (M.Ed) பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன. 1989 ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாக இருந்த எம்.எட், முதுநிலை பட்டவகுப்பு முழு நேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண் :GO.MsNo.543 Date :16.4.1980 ஆணையின் படி நமது கல்லூரி CTE அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. இக்கல்லூரி மாணவ மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990-91 கல்வியாண்டு முதல் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

கல்லூரி மாணவர் சேர்க்கை

2008-2009 ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் சென்னை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவு பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் (NCTE) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய அங்கீகாரக் குழு NAAC குழுவினரால் மறு ஆய்வு செய்யப்பட்டு தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் விண்ணப்பித்தோரின் தரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2008-2009 ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் பி.எட் சேர்க்கை கலந்தாய்வு முறையில் நடைபெற்று வருகிறது. 2019-2020 ஆம் கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கை குழுவில் முதல்வர் கோ.ராஜவேல் அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள் கல்லூரி இணை நூலகர் மற்றும் உடற்கல்வி இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்து சேர்க்கைப் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டனர்.

இவ்வாண்டு கலந்தாய்வு சென்னை லேடி வெலிங்டன் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தால் சென்னையில் நடத்தப்பட்டு கலந்தாய்வில் தேர்வான மாணவர்கள் 18.08.2019 முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் 19.08.2019 முதல் தொடங்கப்பட்டன. இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் 15.07.2019 முதல் தொடங்கப்பட்டன.

2015- ஆம் கல்வியாண்டு வரை இக்கல்லூரி கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்க இணைப்புடன் செயல்பட்டு வந்தது. 2016 முதல் தருமபுரி கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களின் இணைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

மாணவர் மன்றங்கள்

கீழ்க்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டு ஒற்றுமை உணர்விற்கும், பொறுப்புணர்விற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளனர் என்பதை குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

பி.எட் இரண்டாமாண்டு (2018– 2020) மற்றும் முதலாம் ஆண்டு (2019–2021) மாணவர் மன்றங்கள்.

| வ.எண். | பதவி | இரண்டாமாண்டு | முதலாமாண்டு |
|---|---|---|---|
| 1. | மாணவர் தலைவர் | ஆர். எஸ்.பவித்தரன் | ஆர். ரமணி |
| 2. | மாணவர் துணைத் தலைவர் | கே. எஸ். கீர்தனாஸ்ரீ | ஆர். ஆர் காவியா |
| 3. | தமிழ்த்துறைச் செயலர் | கே.பி. கலையரசன் | என். ஜீவானந்தம் |
| 4. | ஆங்கிலத்துறைச் செயலர் | ஆர். சபரிநாதன் | எம். சௌமியா |
| 5. | வரலாற்றுத் துறைச் செயலர் | டி. லியோ பிரான்சிஸ் | எஸ். தனலட்சுமி |
| 6. | உயிரறிவியல் துறைச் செயலர் | எஸ். கிருபாகரன் | பி. லாவன்யா |
| 7. | பொருளறிவியல் துறைச் செயலர் | சி. மணிமேகலை | என் கபில்குமார். |
| 8. | கணிதத்துறைச் செயலர். | எம். பூபலான் | ஆர். சோபிகா |
| 9. | விளையாட்டுத்துறைச் செயலர் | எம். சதீஷ் | டி. அழகேசன், |
| 10. | சமூகப்பணி மன்றச் செயலர் | கே. மகேஷ்வரி | கே. ரம்யா. |
| 11. | ஆண்டு மலர் செயலர் | எம். சோமசுந்தரம் | டி. செந்தில்ராஜா |
| 12. | கைக்கலைத்துறைச் செயலர் | எஸ், ராஜேஸ்வரி | ஆர். ராதிகா |
| 13. | கேள்விக்காட்சி கல்வித்துறை செயலர் ( Audio – Visual ) | எ. குணசேகர் | கே. நந்தக்குமார் |
| 14. | தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறைச் செயலர் (ICT) | எ. தணிகாசலம் | எஸ். கவின்ராஜ் |
| 15. | இளைஞர் செஞ்சிலுவைச் சங்கச் செயலர் (YRC) | எம். சித்தராஜ் | எ. மணிகண்டன். |
| 16. | சிவப்பு சுருள் சங்கம் (RRC) | எஸ். வெங்கடேஷ் | எம். கலையரசி |
| 17. | ஆசிரியர் மன்றச் செயலர் | எஸ். வேல்முருகன் | வி. பிரசாந்த் |
| 18. | நூலகத்துறைச் செயலர். | ஆர். குஞ்சண்ணன் | எம். காவியா. |

இம்மாணவ மாணவிகள் அனைவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை மிகச்சிறப்பான முறையில் செய்து தங்களின் தனித் தன்மையைத் தக்க வைத்துக் கொண்டமைக்காக அனைவரையும் பாராட்டுகிறேன்.

Scanned with CamScanner

மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி 2019-2020

இக்கல்வியாண்டில் பி.எட் இரண்டாமாண்டு பயிற்சி மாணவ மாணவியர்கள் நாமக்கல் ஈரோடு சேலம் மாவட்டங்களில் உள்ள பல்வேறு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2019 முதல் 16 வாரங்கள் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உற்றுநோக்கல் பயிற்சி கற்பித்தல் பயிற்சி மேற்கொண்டனர்.

பள்ளியின் பெயர்

1 எம்.பி.தே அரசு மேல்நிலைப்பள்ளி திங்களூர்

2 அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி திருச்செங்கோடு

3 அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்.

4. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம்,

5. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி , பவானி,

6. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி.

7. அரசு மேல்நிலைப்பள்ளி சித்தோடு,

8. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு.

9. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளிபாளையம்.

10. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பள்ளிபாளையம்.

11. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜாரிகொண்டலாம்பட்டி

12. அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம்.

13. அரசு உயர்நிலைப்பள்ளி படைவீடு

14. அரசு மேல்நிலைப்பள்ளி, அயோத்தியப்பட்டிணம்.

15. அரசு மேல்நிலைப்பள்ளி தாளவாடி.

16. அரசு மேல்நிலைப்பள்ளி அ. செம்புளிச்சாம்பாளையம்.

17. அரசு மேல்நிலைப்பள்ளி , வேம்படிதளம்.

18. அரசு உயர்நிலைப்பள்ளி, புத்தர் வீதி குமாரபாளையம்.

19. அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கவுந்தம்பாடி,

20. அரசு மேல்நிலைப்பள்ளி குள்ளநாயக்கன்பாளையம்.

Scanned with CamScanner

21. பேரறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளி, தொளசம்பட்டி , ஓமலூர்.
22. அரசு உயர்நிலைபள்ளி வேமங்காட்டு வலசு, குமாரபாளையம்.

23. அரசு உயர்நிலைப்பள்ளி, கத்தேரி, குமாரபாளையம்.

24. அரசு உயர்நிலைப்பள்ளி பெரியபுலியூர்.

25. அரசு மேல்நிலைப்பள்ளி, சிங்கம்பேட்டை.

மேற்கண்ட பள்ளியில் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள அனுமதியளித்த ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த உதவிய தலைமையாசிரியர்கள் வழிகாட்டிகளாய் இருந்து ஊக்கப்படுத்தியுள்ள ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சி சிறப்பாக நடைபெற மாணவ மாணவியரின் விருப்பத்திற்கேற்ப பள்ளிகளைத் தேர்வு செய்து கற்பித்தல் பயிற்சியை சிறப்பாக முடிக்க உதவிய முதல்வர் மற்றம் தமிழ் இணைப்பேராசிரியர் முனைவர்.வெ.கலைச்செல்வி அவர்களுக்கும், கல்லூரியின் சார்பில் உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

பெற்றோர் ஆசிரியர் கழகக்கூட்டம்

கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் 1999 அம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளுக்கும் மாணவர்கள் நலன் சார்ந்த பணிகளுக்கும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 19.10.2019 அன்று 11 மணி அளவில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் கூட்டம் முதல்வர் முனைவர்.வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமையில் அனைவரும் கலந்து கொண்டனர். இதில் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொறுப்பாளாராகப் புதிதாக பெற்றோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

PTA செயல்பாடுகள்

19-20 ஆம் கல்வியாண்டு PTA செலவு செய்யப்பட்டது ரூ.179815/-

| | | |
|---|---|---|
| 1 | அனைத்து வகுப்பறையில் சுவர் கடிகாரம் மாட்டியது | ரூ.6410 |
| 2 | 9.10.19 ல் PTA கூட்டம் | ரூ.4530 |
| 3 | 2019-2020 விளையாட்டு பொருட்கள் வாங்கியது | ரூ.9915 |
| 4 | கலைக்கொல்லி இயந்திரம் வாங்கியது | ரூ.3900 |
| 5 | கல்லூரி வளாகம் முழுமைக்கும் NCTE PAR WORK | ரூ.21600 |
| 6 | FLEX BOARD PAR WORK NCTE PAR | ரூ.14500 |
| 7 | NCTE PAR WORK வளாகத்தின் அனைத்து பகுதிகளையும் வீடியோ எடுத்தது | ரூ.20000 |
| 8 | பாரத பிரதமர் மோடியின் சுவச்சத் வளாகத்தூய்மை | ரூ. 6800 |
| 9 | சிறப்பு பேச்சாளர் அழைத்து பேச வைத்தது | 2000 |
| 10 | COMPUTER WORK SALARY | 25200 |

Scanned with CamScanner

# 2019– 2020 ஆம் ஆண்டு உடற்கல்வித்துறை ஆண்டறிக்கை

20219 –2020 ஆம் ஆண்டு ஆண்டுக்கான விளையாட்டுக் குழுவானது கல்லூரி முதல்வர் முனைவர். வெ. கலைச்செல்வி அவர்களைத் தலைவராகவும் உடற்கல்வி இயக்குநர் முனைவர். மொ. ரவி செயலராகவும், செல்வன். டி. அழகேசன் அவர்களைத் முதலாமாண்டு மாணவச் செயலராகவும், செல்வன் எம். சதிஷ் அவர்களைத் இரண்டாமாண்டு மாணவச் செயலராகவும் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டது. இக்கல்லூரியில் அனைத்து மாணவ– மாணவியர்களுக்கும் கேரம், சதுரங்கம், கபாடி, கையுந்துப்பந்து, எறிபந்து, வலையப்பந்து, இறகுப்பந்து, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்கள் மற்றும் தடகள விளையாட்டுக்கள் பயிற்சிபளிக்கப்பட்டன.

இக்கல்லூரியில், கல்லூரி முதல்வர் அவர்களின் தலைமையில் 03.01.2020 மற்றும் 04.01.2020 ஆகிய இரண்டு நாட்கள் கல்லூரி அளவிலான கலாச்சாரப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் மிகச்சிறப்பாக நடத்ததப்பட்டன. இதில் மாணவர்களுக்கு 100 மீட்டர் 400 மீட்டர் 800 மீட்டர் ஓட்டப் போட்டிகள், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், ஈட்டிஎறிதல், தட்டு எறிதல், 4X100 மீட்டர் தொடரோட்டப் போட்டிகள் மாணவியர்களுக்கு 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர் ஓட்டப் போட்டிகள், நீளம் தாண்டுதல், ஈட்டி எறிதல் தட்டுஎறிதல் 4X100 மீட்டர் தொடரோட்டப் போட்டிகள் ஆகியன நடத்தப்பட்டன.

மேலும் மாணவர்களுக்குக் கபாடி, கையுந்துப்பந்து, இறகுபந்து கேரம், சதுரங்கம் போன்ற போட்டிகளும் மாணவியர்களுக்கு எறிபந்து, வலையப்பந்து இறகுபந்து, கேரம், சதுரங்கம் போன்ற போட்டிகளும் நடத்தப்பட்டன.

இக்கல்லூரி அளவிலான தடகளப் போட்டிகளில் மாணவர்கள் பிரிவில் இரண்டாமாண்டு மாணவர் எம். சதிஷ் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார் மாணவியர்கள் பிரிவில் மாணவி எம். கோகிலா தனிபநர் சாம்பியன் பட்டம் வென்றார் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை ஆடவர் அணி பெற்று அந்த அணியினர்களுக்குப் பெருமையைத் தேடித்தந்தது.

கல்லூரி அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ – மாணவியர்கள், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் சார்பில் நடத்தப்படும் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்துக்கொன்டனர். இந்த மாவட்டப் போட்டியானது 11.02. 2020 அன்று திருச்செங்கோடு KSR கல்வி நிறுவனதில் நடைபெற்றது. இப்போட்டியில் இரண்டாமாண்டு மாணவர் எம். சதிஷ் 400 மீட்டர் ஓட்டம் மற்றும் உயரம் தாண்டும் போட்டிகளில் முதலிடமும், முதலாமாண்டு மாணவர். எஸ். கருப்புசாமி 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் முதலிடமும், இரண்டாமாண்டு மாணவி எஸ். இராஜேஸ்வாி குண்டு எறிதல் போட்டியில் முதலிடமும், இரண்டாமாண்டு மாணவர்கள் பி. கலையரசன் 100 மீட்டர் ஓட்டப் போட்டியில் இரண்டாமிடம் எம். ஜெயவேல் 800 மீட்டர் போட்டியில் இரண்டாமிடமும் 4X100 மீட்டர் தொரோட்டப் போட்டியில் எம். சதிஷ் , பி. கலையரசன் எம். ஜெயவேல், எ. அந்தோணி ஆபெல் ஆகியோர் இரண்டாமிடமும் பெற்றுக் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

Scanned with CamScanner

மேலும், KSR கல்வி நிறுவனத்தில் 10. 2. 2020 அன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான கலாச்சாரப் போட்டிகளில் இரண்டாமாண்டு மாணவர் எஸ். கிருபாகரன் பேச்சுப் போட்டியில் முதலிடமும், முதலாமாண்டு மாணவி அ. இந்துமதி கட்டுரைப் போட்டியில் மூன்றாமிடமும் பெற்று நம் கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

நாமக்கல், சேலம், தருமபுரி கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடகிய மண்டல அளவிலான கலாச்சாரம் மற்றும் விளையாட்டு போட்டிகள் 17.02.2020 மற்றும் 18.02.2020 ஆகிய இரண்டு நாட்கள் திருச்செங்கோடு K.S.R. கல்வி நிறுவனத்தில் நடைபெற்றது.

மாவட்ட அளவிலான தடகளப் போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெற்று இரண்டாமாண்டு மாணவர் எம். சதிஷ் தனிநபர் சாம்பியன் பட்டம் வென்றார். மேலும் 10.02.2020அன்று நடைபெற்ற கலாச்சார போட்டிகளில் இரண்டாமாண்டு மாணவர் எஸ். கிருபாகரன் பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். 18.02.2020 அன்று நடைபெற்ற தடகள வியைாட்டுப் போட்டிகளில் இரண்டாமாண்டு மாணவர் பி. கலையரசன் 100 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாமிடம் பெற்று பதக்கம், இரண்டாமாண்டு மாணவர் எம். சதிஷ் 400 மீட்டர் ஓட்டம் மற்றும் உயரம் தாண்டுதல் போட்டிகளில் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கமும், முதலாமாண்டு மாணவர் எஸ். கருப்புசாமி 800 மீட்டர் ஓட்டம் போட்டியில் மூன்றாமிடம் பெற்று வெண்கலப்பதக்கமும், 4X100 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் எம். சதிஷ்; பி. கலையரசன் எம். ஜெயவேல், எ.அந்தோணி ஆபெல் ஆகியோர் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் பெற்று மேலும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

Scanned with CamScanner

# TEACHER'S PLEDGE

I Solemnly Pledge to what I Hold Dearly that as a Teacher

I Will Practice My Profession with Honour

I Will Abstain from Using Teaching Practice

Considered Inappropriate and

I Will Follow the Students and Guidelines for

My Profession to the All Most of My Power

Always Reaching for Excellence,

I Will Continue to Learn and Enhance

My Teaching Skills throughout My Career

I will be a Positive Role Model for Children and Youth and do

All that I can to Help them Acquire the Skills,

Knowledge and Desire they Need in

Order to Enjoy a Lifetime of Physical Activity

- Government College of Education
Komarapalayam

Scanned with CamScanner

# TEACHER

"The Mediocre teacher tells
The good teacher Explains
The Superior teacher demonstrates
The great teacher inspires."

- Arnald

"A Teacher can never truly teach
unless he is still Learning himself
A lamp can never light another lamp
unless it continues to burn its own flame."

- Rabindranath Tagore

rameshkennedy@gmail.com.

Scanned with CamScanner